செ.வெ.எண்: 52 நாள்: 29.11.2020

**விழுப்புரம் மாவட்டத்தில் நிவர் புயல் பாதிப்பினையடுத்து ஏரி நீர்வரத்து வாய்க்கால் மற்றும் அணைக்கட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

விழுப்புரம் மாவட்டத்தில் நிவர் புயல் பாதிப்பினையடுத்து ஏரி நீர்வரத்து வாய்க்கால் மற்றும் அணைக்கட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு இன்று (29.11.2020) ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட விழுப்புரம் வட்டம் ஜானகிபுரம், காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கல்பட்டு ஊராட்சி, விக்கிரவாண்டி வட்டத்திற்குட்பட்ட துறவி ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் நிவர் புயல் பாதிப்பினையடுத்து ஏரி நீர்வரத்து வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்ட பகுதிகளில் மணல் மூட்டைகள் கொண்டு நீர் வெளியேறாமல் பாதுகாக்கப்படுவதை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் அதனை உடனடியாக சரிசெய்து ஏரிகளில் மழைநீரினை தேக்கி வைக்க வேண்டும் என பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து விக்கிரவாண்டி வட்டத்திற்குட்பட்ட வி.மாத்தூர் ஊராட்சியில் பம்மை ஆற்றின் குறுக்கே உள்ள வி.மாத்தூர் அணைக்கட்டில் நீர்மட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்/கூடுதல் இயக்குநர் திரு.வெ.மகேந்திரன், பொதுப்பணித்துறை (நீ.வ.ஆ) செயற்பொறியாளர் திரு.ஜவகர் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.